1993 டிசம்பர் 31]

அல்லாமல் ஹோசூரில் உள்ள தொழிற்சாலைகளுக்கும், கிண்டி போன்ற இடங்களில் உள்ள தொழிற்சாலைகளுக்கும் அருகிலே டிஸ்பென்சரிகள் 24 மணி நேரமும் இயங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா என்று தான் நான் கேட்க விரும்புகிறேன். அயனாவரத்தில் இருப்பது தொழிலாளர்களுக்கு தெரியும். இருந்தாலும்கூட அங்கே போனால் பணச்செலவு. அத்துடன் அமைச்சர் அவர்கள் சொல்லும்போது அங்கே ஆம்புலன்ஸ் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அம்பத்தூரில் இருக்கும் தொழிற்சாலையில் ஆக்சிடென்ட் என்று சொன்னால், அயனாவரத்திலிருந்து ஆம்புலன்ஸ் வந்து ஏற்றிச் செல்வதற்கு 2 மணி நேரம் ஆகிவிடும். சில நேரங்களில் ஆம்புலன்ஸ் கிடைக்காது. எனவே அந்தந்தப் பகுதியிலேயே 24 மணி நேரம் இயங்குவதற்கு வசதி செய்து தரப்படுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 11.00

மாண்புமிகு திரு. ஏ. எம். பரமசிவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அம்பத்தூர் ஈ.எஸ்.ஐ. மருந்தகம் புற நோயாளிகளுக்காக ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. உள்ளபடியே தொழிலாளிகளுக்கு நீண்டகாலமாக இருக்கின்ற அயனாவரம் மருத்துவமனை ஈ.எஸ்.ஐ. மருத்துவமனை 24 மணி நேரமும் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன் அனுமதியோடு பேரவையின் வினாக்கள்--விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. வினா எண். 116, திரு. எஸ். சண்முகநாதன், மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

116–

ஆலங்குடி தொகுதியில் கூட்டுறவு வங்கி மூலம் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள்.

*** 11160–திரு. எஸ். சண்முகநாதன்:**

மாண்புமிகு கூட்டுறவுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) ஆலங்குடி தொகுதி, சூரக்காடு மற்றும் காட்டாத்தி கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தில் (ஐ.ஆர்.டி.பி.) 1990–91-ஆம் ஆண்டுகளில் வழங்கப்பட்ட விவசாயக் கடன்கள் எவ்வளவு?

(ஆ) இதில் பலன் பெற்ற ஆதிதிராவிடர் எத்தனை பேர்?

TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன், கூட்டுறவுத்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

(அ) ஆலங்குடி தொகுதி சூரக்காடு மற்றும் காட்டாத்தி கூட்டுறவு வங்கிகளில் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் (ஐ.ஆர்.டி.பி.) திட்டத்தின்கீழ் 1990-91-ஆம் ஆண்டுகளில் சூரக்காட்டிலுள்ள முல்லங்குறிச்சி கூட்டுறவு வங்கியில் 107 நபர்களுக்கு ரூ. 3.98 லட்சம் விவசாயக் கடனாக வழங்கப்பட்டு இருக்கிறது.

(ஆ) இந்த 107 பெயர்களில் 84 ஆதிதிராவிடர்கள் பலன் பெற்றிருக்கிறார்கள்.

திரு. எஸ். சண்முகநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே, ஆலங்குடி தொகுதியில் உள்ள சூரக்காடு மற்றும் காட்டாத்தி கூட்டுறவு வங்கிகளில் அதிகம் பேர்களுக்கு இந்த ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்கி இருக்கிறார்கள். இந்த ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குவதிலே காலதாமதம் செய்கின்ற சூழ்நிலை இருக்கிறது. மற்ற அரசு வங்கிகளிலே இந்த ஐ.ஆர்.டி.பி. கடனை கொடுப்பதற்கு மறுக்கின்ற சூழ்நிலை இருக்கின்ற காரணத்தினாலே ஆலங்குடியிலே மிகச் சிறப்பாக இயங்கி வருகின்ற கூட்டுறவுத் துறையின் மூலம் இந்த ஐ.ஆர்.டி.பி.-க்கு என்று ஸ்பெஷலாக – சிறப்பாக கூட்டுறவு வங்கி ஏற்படுத்தித் தருவீர்களானால், ஐ.ஆர்.டி.பி. கடன் வழங்குவதிலே ஏழை எளிய மக்கள் அதிக நன்மை பெறுவார்கள். ஆகவே தொகுதி வாரியாக ஐ.ஆர்.டி.பி.-க்கு என்று ஒரு சிறப்பு கூட்டுறவு வங்கி நிறுவுவதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முல்லங்குறிச்சி கூட்டுறவு விவசாய வங்கியின் மூலமாக 1990-91-ல் 107 மனுக்கள் பெறப்பட்டு அந்த 107 மனுக்களுக்கும் கடன் வழங்கப்பட்டு இருக்கிறது. இந்த ஐ.ஆர்.டி.பி. கடன் முறை என்பது ஊரக வளர்ச்சித் துறையின் மூலமாக பயனாளிகளுடைய பெயர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அந்தப் பெயர்கள் அடங்கிய பட்டியலை மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்குத் தந்து, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அந்தப் பயனாளிகளின் தேவைகளை அறிந்து பல பல வங்கிகளுக்கு அந்தப் பெயர்களை அவர்கள் பரிந்துரை செய்கிறார்கள். அப்படிச் செய்கின்றபோது அநேகமாக 100-க்கு 40-லிருந்து 50 விழுக்காடு வரையிலே கூட்டுறவு வங்கிகள் தான் அந்தக் கடன்களை அதிகமாகத் தந்து வருகின்றன. இந்த ஐ.ஆர்.டி.பி. லோன்களை பொறுத்தமட்டில் பெரும் அளவிற்கு ஆதிதிராவிடர் பழங்குடி மக்களும் பிற்படுத்தப்பட்ட மக்களும், வறுமைக்கோட்டிற்கு கீழே இருக்கின்ற மக்களும் தான்

1993 டிசம்பர் 31]

அதிகமாகப் பயன் பெறுகிறார்கள். கூட்டுறவுத் துறை தன்னாலான முயற்சிகள் அத்தனையிலும் ஈடுபட்டு அவர்களுக்கு எந்த அளவுக்கு அதிகமாக கூட்டுறவுத் துறை வங்கிகள் மூலமாக கடன்கள் தரமுடியுமோ அந்த அளவிற்கு அதிகமாக தந்து வருகின்றன என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எஸ். சண்முகநாதன்: பேரவைத் தலைவர் அவர்களே. இந்த ஐ.ஆர்.டி.பி. கடன் பெறுவதிலே சில குறைபாடுகள் இருக்கின்றன. உதாரணமாக கூட்டுக் குடும்பத்திலே அண்ணனுக்கு கடன் இருந்தால் தம்பி வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. அண்ணன் தம்பிகள் பாகம் பிரித்துக் கொண்டு தனிக் குடித்தனம் வந்து, ரேஷன் கார்டும் தனியாக வைத்திருக்கின்ற போதும். அண்ணனுக்கு கடன் பாக்கி இருக்கின்ற காரணத்தினாலே தம்பியும் கடனை பெறமுடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதுபோன்ற விதிகளை மாற்றுவதற்கு அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கா. ப. பட்டாபிராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுக் குடும்பத்திலே இருந்து ஒருவர் தனியாகப் பிரிந்து செல்லுகிறார் என்று சொன்னால், சட்டப்படி அந்தக் கூட்டுக் குடும்பத்திலேயிருந்து அவர் பிரிந்து சென்றார் என்பதற்கான ஆவணங்களை உரிய அதிகாரிகளிடம் தந்தால், பிரிந்து சென்றவர்களுடைய குடும்பம் தனிக் குடும்பம் என்று கணக்கு எடுக்கப்பட்டு அவர் தருகின்ற அந்த மனுவை பரிசீலனை செய்வார்கள். கூட்டுக் குடும்பத்திலேயிருந்து பிரிந்து சென்றுவிட்டோம் என்று வாய்மொழியாகச் சொன்னால் அதை அரசு அதிகாரிகள் ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 117. திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு இருக்கையில் இல்லை. வினா எண். 118. திரு. வே. தம்புசாமி. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

118–

நாகலூரிலிருந்து வலிவலம் வரை சாலை அமைத்தல்.

*** 20062–திரு. வே. தம்புசாமி:**

மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

(அ) திருவாரூர் வட்டம். நாகலூரில் இருந்து வலிவலம் வரை சாலை அமைக்கும் திட்டம் அரசு செயற்குறிப்பில் உள்ளதா?